**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண். 196/ந/2025 நாள். 14.11.2025**

சு.சேக் பரீத்,
பள்ளபட்டி, கரூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பள்ளபட்டி நகராட்சி, பள்ளபட்டி.
கரூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி (வட்டம்) பள்ளபட்டி நகராட்சி, பட்டாணித் தெரு, எண்.128 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சு. சேக்பரீத் என்பவரின் 07.01.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.01.2025 அன்று பெறப்பட்டு, 196/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி (வட்டம்) பள்ளபட்டி நகராட்சி, பட்டாணித் தெரு, எண்.128 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சு. சேக்பரீத் என்பவரின் 07.01.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“(i) கரூர் மாவட்டம் பள்ளபட்டி இரண்டாம் நிலை நகராட்சியில் 60 ஆயிரம் பேர்கொண்ட மக்கள் தொகையில் 27 வார்டுகளாக பிரிக்கப்பட்டு நகர் மன்றம் செயல்படுகிறது.

(ii) நகராட்சி துறைக்கு வரி இழப்பு ஏற்படுத்தும் முறையில் பல வசதிபடைத்தவர்களின் தொழிற் கூடங்கள், குடியிருப்பு வீடுகள், வாடகை வீட்டிற்கு சட்ட விரோதமாக வரிகுறைப்பு செய்தும் அவர்களிடம் பல்லாயிரங்களை இலஞ்சமாக கூட்டுக் கொள்ளை செய்து உள்ளனர்.

(iii) நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் அடிப்படை வசதிகள் முறைகேடுகள் செய்யும் நோக்கத்தோடு தரமற்ற ஒப்பந்ததாரர்களை கொண்டு பணி சம்பந்தமான விவரம் பொதுமக்கள் கவனத்திற்கு தெரியப்படுத்தாமல், இதற்கு மேலாக அந்த பகுதி மாமன்ற உறுப்பினர்களுக்கே, என்ன பணி, என்ன தொகையில் எந்த வரைமுறையில் செய்யப்படுகிறது என்பது கூட தெரியாத

அவல நிலையில் சம்பந்தப்பட்ட நகராட்சி தலைவர், ஆணையர், மேலாளர் இதற்கு முழு உடந்தையாக நகராட்சி பொறியாளர் செயல்படுகிறார்.

(iv) தரமற்ற அடிப்படை வசதிகளான சாலைகள், சிமெண்ட் சாலைகள், சாக்கடை, வடிகால் அமைப்புகள், பழுது பார்ப்பு பணிகளான சாலை, சாக்கடை, பைப்லைன் பணிகள் தரமற்ற ஒப்பந்ததாரர்கள் மூலம் போடப்படுவதோடு, அளவீடு மோசடிகளில் முறைகேடாக ஊழல் செய்கின்றனர்.

(v) குடிநீர் இணைப்புகளில் போலி லூப் லைன்கள் மூலமும் மோசடி ஊழல் செய்வது, மேலும் சட்ட விரோதமாக அதிககட்டணம் வரையறையற்ற முறையில் பயனாளிகளிடம் குடிநீர் இணைப்புக்கான பொருட்களை பெறுவதோடு ஒவ்வொரு குடிநீர் இணைப்புக்கும், அலுவலக நகராட்சி துறை ரசீது போடாமல் ரூ.5,000 பெறுதல், குடிநீர் இணைப்புக்கு பயனாளிகளிடம், சாலை பராமரிப்புக்கு தொகை பெற்றுக் கொண்டு சாலை பராமரிப்பு செய்யாமல் பொதுமக்களுக்கு இடையூறு செய்யும் விதமாக குண்டும் குழியுமாக விடுதல், மேலும் பயனாளிகளிடமே சாலையை பராமரிப்பு பணி செய்யக்கோரி மிரட்டல்.

(vi) ஆக்கிரமிப்பாளர்களை ஊக்குவித்து நகர்புற அரசாங்க இடத்தை ஆக்கிரமிப்பு செய்துகொள்ள அனுமதிப்பது அதற்காக பல்லாயிரக்கணக்கில் லஞ்சமாக பெற்றுக் கொண்டு கூட்டுக் கொள்ளை செய்து வருவது.

(vii) உயர்திரு நீதிமன்றம் உத்தரவு ஆணை பிறப்பித்தும் ஆக்கிரமிப்பு அகற்ற ஆணைகள் பிறப்பித்தும் உயர் நீதி மன்ற ஆக்கிரமிப்பு அகற்றும் ஆணையை மதிக்காதது மட்டுமல்லாமல் நீதியரசர்களான நீதிபதிகளை ஒருமையாக பேசுவது, முக்கிய சாலைகள், தெருவுசாலைகள், புறம்போக்கு இடங்கள், ஆக்கிரமிப்பு ஊக்குவிப்பதோடு, ஆக்கிரமிப்பை அகற்றாமல் உன்னால் என்ன செய்ய முடியுமோ செய், எங்கு செல்ல முடியுமோ செல் என்று நகராட்சி பொறியாளரும் இவருக்கு முழு உடந்தையாக நகராட்சி நகரமைப்பு அலுவலர் உயர் திரு. சீனிவாசனும் கூறுவதோடு, ஆக்கிரமிப்பாளர்களை தூண்டிவிட்டு மிரட்டல்.

(viii) நகரமைப்பு அலுவலர் திரு. சீனிவாசன் சட்டவிரோதமாக லஞ்ச ஊழல் செய்ய நகராட்சி பொறியாளர் ரிச்சர்ட் உடன் இணைந்து நகராட்சி தலைவர், ஆணையரை கையில் போட்டுக்கொண்டு பிளான் அப்ரூவல், அளவீடுகள், சாலை மற்றும் தெரு பகுதி ஆக்கிரமிப்புகள், பொதுமக்கள் அடிப்படை தேவைகள் பணிகளில் சட்ட விரோதமாக சம்பந்தப்பட்ட துறையில் அதிகார வரம்பை மீறி செயல்படுகின்றனர். அதிக அளவு இலஞ்ச ஊழல் மோசடியில் ஈடுபடுகின்றனர்.

(ix) நகராட்சி அலுவலக உதவியாளர் திரு. ரவி. என்பவர் அரசாங்க ஊழியராக மக்களுடைய வரிபணத்தை சம்பளமாக பெற்றுக்கொண்டு அலுவலக பணி நேரங்களில் கந்து வட்டி செய்வது, நகராட்சி மாமன்ற தலைவியின் புரோக்கராக பல முறைகேடான வகையில் மக்களிடம் இலஞ்சம் பெற்று தருவதோடு இதே பள்ளபட்டி நகராட்சியில் ஒப்பந்தபணி செய்து வரும் அலுவலக ஒப்பந்த பணியாளர்களான

1. கவின் என்பவரிடமிருந்து ரூ.4,00,000 (நான்கு இலட்சம்)
2. பூபாலன் என்பரிடமிருந்து ரூ.4,00,000 (நான்கு இலட்சம்)
3. சுகன்யா என்பரிடமிருந்து ரூ.1,00,000 (ஒரு இலட்சம்)
4. சிலம்பரசி என்பரிடமிருந்து ரூ.1,75,000 (ஒரு இலட்சத்தி எழுபத்தி ஐந்தாயிரம்)

5. ஆணையர் வாகன ஓட்டியான கருப்பு சாமியிடமிருந்து அவருடைய மகன் ராஜேந்திரன் என்பவருக்காக பணி பெற்றுத்தர ரூ.2,00,000 (இரண்டு இலட்சம்) மேலும்
6. வசந்த் என்பரிடமிருந்து தலா ரூ.3,00,000 (மூன்று இலட்சம்)

வேலைவாங்கி தருவதாக தலைவர் பெயரை கூறி அலுவலக உதவியாளர் மேற்கண்ட நபர்களிடமிருந்து லஞ்சம் பெற்று உள்ளார். இத்தோடு VRS பணி ஓய்வு பெற அணுகியுள்ளார்.

(x) நீதிமன்றத்தையும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் மேல் ஜனநாயக உரிமைகளை ஒவ்வொரு குடிமகனும் வைத்துள்ளான். எனவே இதற்கு முன்னதாக இதே நகராட்சி முறைகேடுகளை கடந்த 26.07.2024 அன்று மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் புகார் தெரிவித்ததின் பேரில் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் ஆணையம் விசாரணை அழைப்பை ஏற்று கடந்த 20.09.2024 அன்று நகராட்சி ஆணையருடன் 09.10.2024 அன்று நகராட்சி மாமன்ற தலைவியுடனும் நேரடி குறைகேட்பு விசாரணை நடத்தப்பட்டது. முறையீட்டு மனு எண்.78/ந/2024. இதன்படி வந்ததிலிருந்து இவர்களின் பேச்சும், ஏச்சும், ஏளனமும், மிரட்டல்களும் அதிகமாயின. இதோடு முறைகேடுகளும் அதிகளவு நடைப்பெறுகிறது. நகராட்சி பொறியாளர், நகராட்சி உதவியாளர் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. விசாரணை செய்து தீர்ப்பும் வரவில்லை. நகராட்சி குடும்பத்தினர் என்னை எங்கு வேண்டுமானாலும் போ, வெறும் கையோடு திருஒடு ஏந்துவாய் என்று கூறுகின்றனர்.

தயவு கூர்ந்து உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் என் சூழ்நிலையையும், கால நிலையும் கருத்தில் கொண்டு ஒரே அமர்வில் மூன்ற பேரை விசாரித்து வழிவகை செய்யவும். முன்னாள் விசாரணை செய்த மனு எண்.78/ந/2024–க்கு நீதியான தீர்ப்பு வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து பள்ளப்பட்டி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 17.06.2025 நாளிட்ட அறிவிப்பு கடிதம் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. பள்ளப்பட்டி நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.687/2025/சி1, நாள்.02.07.2025–ன் வழி கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

"பள்ளபட்டி நகராட்சி 27 வார்டுகளை உள்ளடக்கியதாகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 30,624. தற்போழுது தோராயமாக 36,884 ஆகும்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்களின் 20.06.2025 நாளிட்ட கடிதம் எண்.196/ந/2025 உடன் பெறப்பட்ட திரு. சு.சேக் பரீத் என்பவரின் புகாரில் பள்ளபட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தொழிற்கூடங்கள் மற்றும் குடியிருப்பு வீடுகளுக்கு சட்டவிரோதமாக வரி குறைப்பு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 15$^{th}$ CFC Grant பெற ஏதுவாக தமிழ்நாடு முழுவதும்அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் 15% வரி உயர்வு செய்ய தலைமை அலுவலகம் மூலம் ஆணைகள் பெறப்பட்டு அதன்படி குறைந்த மதிப்பீடு உடைய, இதுவரை மதிப்பீடு செய்யப்படாத மற்றும் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு உரிய முறையில் அளவீடு செய்து வரிவிதிப்பு செய்யப்பட்டு 15% வரி உயர்வும்

செய்யப்பட்டது. இதன் மூலம் நகராட்சிக்கு வரி இழப்பு ஏதும் ஏற்படவில்லை. மேலும், வரிகுறைப்பு ஏதும் செய்யப்படவில்லை.

பள்ளப்பட்டி நகராட்சியில் உள்ள 27 வார்டுகளில் தரக்குறைவான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்படாமல் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. நகராட்சி விதிகளின்படி நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நகர்மன்றத்தில் முறையாக நிர்வாக அனுமதி பெறப்பட்ட பின்னரே பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பொதுமக்கள் மற்றும் அலுவலகர்கள் முன்னிலையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. நகராட்சி விதியின்படி ஒப்பந்ததாரர்களின் தரம் ஆண்டிற்கொருமுறை ஆய்வு செய்து ஒப்பந்தப் பதிவு புதுப்பிக்கப்படுகிறது. மேலும் இந்நகராட்சியில் பொது நிதியில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளும் மன்ற அனுமதி பெற்ற பின்பே செய்யப்படுகிறது. பணிகளின் முடிவறிக்கை (பணியின் தன்மையை) மூன்றாம் நபர் ஆய்வு செய்து தரத்தை உறுதி செய்த பின்பே பணி முடிவறிக்கை பெறப்படுகிறது. இதனால் பணிகளின் தரம் குறையாமல் அனைத்தும் நல்ல முறையில் செய்யப்படுகிறது.

பள்ளப்பட்டி நகர் பகுதியில் ஆக்கிரமிப்பு இருப்பதாகவும் அதை அகற்ற மறுப்பதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை. நெடுஞ்சாலைதுறைக்கு சொந்தமான திண்டுக்கல் மெயின்ரோட்டில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற சம்மந்தப்பட்ட துறைக்கு நகராட்சி மூலம் கடிதம் அனுப்பப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. மேலும், ஆக்கிரமிப்பு தொடர்பான புகார்கள் ஏதும் வரப்பெற்றால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது .

பள்ளப்பட்டி நகராட்சியில் 2024–25–ம் ஆண்டிற்கு 32 எண்ணிக்கையில் கட்டிட அனுமதி கேட்டு விண்ணப்பம் பெறப்பட்டதில் ஒருங்கிணைந்த கட்டிட விதிகள் 2019, சட்டம், 1998 உட்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இச்சட்ட விதிகளின்படி அறிவிக்கப்பட்ட அரசாணையின்படி 2500 சதுர அடி வரை மனையில் 3500 சதுர அடி அளவிற்கு வீடு கட்டிக்கொள்ள Single Window Portal மூலம் அனைத்தும் Online–ல் அனுமதி அளிக்கப்படுகிறது. இதற்கு பொதுமக்கள் அலுவலகத்திற்கு நேரடியாக வர வேண்டிய கட்டாயம் ஏதும் இன்றி எவ்வித முறைகேடும் ஏற்படாவண்ணம் உருவாக்கப்பட்ட ஒரு செயல்முறை ஆகும்.

பள்ளப்பட்டி நகராட்சியில் பணியாற்றி வரும் திரு. க.ரவி, அலுவலக உதவியாளர் அரசு வேலை வாங்கித் தருவதாக கூறி லஞ்சம் பெற்றுள்ளதாக புகார் வரப்பெற்றுள்ளது. சம்மந்தபட்ட நபருக்கு குறிப்பாணை வழங்கி விளக்கம் கோரப்பட்டதில் தனியர் 27 ஆண்டுகளாக இந்நகராட்சியில் அலுவலக உதவியாளராக பணியாற்றி வருவதாகவும், காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே என் மீது புகார் வரப்பெற்றதாக விளக்கமளித்துள்ளார். சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கு விருப்ப ஓய்வு ஏதும் வழங்கப்படவில்லை. தொடர்ந்து பணியில் இருந்து வருகிறார் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பள்ளப்பட்டி நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் 300 புதிய குடிநீர் இணைப்புகள் உடனடியாக வழங்க உத்தரவிடப்பப்பட்டது. ஆனால் தற்சமயம் வரை 142 புதிய குடிநீர் இணைப்புகளே விண்ணப்பம் பெறப்பட்டு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் உத்தரவிடப்பட்ட 300 இணைப்புகளில் மீதமுள்ள புதிய குடிநீர் இணைப்புகளை பெற பள்ளபட்டி நகர் பொதுமக்களிடமிருந்து

விண்ணப்பம் கூட வரப்பெறவில்லை. குடிநீர் பிரிவு பணியாளர்களை கொண்டு பொதுமக்களுக்கு புதிய குடிநீர் இணைப்பு பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் புதிய குடிநீர் இணைப்புகள் நகராட்சி மூலம் வழங்க தயார் நிலையில் உள்ளது. பொதுமக்களிடமிருந்து முறையாக விண்ணப்பம் பெற்று உரிய முறையில் கள ஆய்வு செய்து மதிப்பீடு செய்யப்பட்ட பின்பே புதிய குடிநீர் இணைப்பு வழங்க பொறியியல் பிரிவிற்கு நகராட்சி விதிகளின்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் முறையற்ற குடிநீர் இணைப்பு ஏதும் வழங்க வழியில்லை.

திரு.சு.சேக்பரீத், பள்ளபட்டி என்பவர் சென்ற ஆண்டு 26.07.2024 அன்று உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அவர்களிடம் புகார் தெரிவித்துள்ள புகார் எண்.(78/M/2024. நாள்.13.08.2024) ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தனர்.

இந்நிலையில் சென்ற 15.05.2025 அன்று உள்ளாட்சி அமைப்புகளின் முறை மன்றத்தின் தீர்ப்பு வரப்பெற்றது. இந்நிலையில் திரு. சு. சேக் பரீத், பள்ளபட்டி என்பவர் சென்ற வருடம் ஏற்கனவே தெரிவித்த புகாரை போலவே இந்த ஆண்டும் நகராட்சியால் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகள், அலுவலர் மற்றும் பணியாளர்களின் மீது தொடர்ச்சியாக புகார் தெரிவித்துள்ளார். இதனால் நகராட்சி பணிகளில் தொய்வு ஏற்படுவதாலும், மற்றும் பணியாளர்களின் மனநிலை பெரிதும் பாதிக்கப்படுகின்றது. திரு.சு.சேக் பரீத் தெரிவித்த எந்த விதமான புகார்களுக்கும் முகாந்திரம் ஏதும் இல்லை என்ற விளக்கத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரையும், எதிர்மனுதாரரான பள்ளப்பட்டி நகராட்சி ஆணையரையும் 24.07.2025 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ள 15.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. சு.சேக்பரீத் என்பவர் 24.07.2025 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

“1. பள்ளபட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் Crescent Matriculation என்ற தனியார் பள்ளி அரசு நிலத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டு, மேற்படி பள்ளி கடந்த 35 வருடங்களாக இயங்கிவருகிறது. இப்பள்ளிக்கு நகராட்சியினால் முறையான வரிவிதிப்பு இன்று வரை செய்யப்படவில்லை. இதனால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

2. பள்ளபட்டி நகராட்சியில் இயங்கி வரும் அரேபியன் டிலைட் ஹோட்டலுக்கு நகராட்சியினரால் முறையான வரிவிதிப்பு செய்யப்படவில்லை. மேற்படி ஹோட்டல் அருகில் பேருந்து நிலையம் இருப்பதால், சைக்கிள் ஸ்டாண்ட் அனுமதியின்றி அமைத்துள்ளனர். இதற்கும் முறையான வரிவிதிப்பு நகராட்சியினரால் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

3. திண்டுக்கல் ரோடு, ஊரூஸ் கடைத்தெரு மற்றும் கடைவீதியில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை. ஆக்கிரமிப்புகளை அகற்ற நகராட்சியால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

4. பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் சரியாக முறைப்படுத்தப்படவில்லை. வார்டு எண்.22–ல் Syntex டாங்க் மட்டும் பயன்படுத்தப்படாமல் உள்ளது. மேலும், பைப், மோட்டார்

ஆகியவைகள் களவாடப்பட்டுள்ளது. இது குறித்து நகராட்சியால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

5. சாலை அமைக்கும்போது சாலையை தோண்டி விட்டு சாலை போடுவதில்லை. இதனால் சாலைகள் குடியிருப்புகளைவிட உயர்ந்து உள்ளது. சாலையினை சரியாக அமைத்திட நகராட்சியிடம் கோரியும் எந்த நடவடிக்கையும் இல்லை.

6. பள்ளபட்டி நகராட்சியில் மொத்தம் 27 வார்டுகளுக்கும் ஒரே ஒரு பிளம்பர் வைத்து பராமரிப்பு பணிகள் செய்யப்படுகிறது. எனவே குடிநீர் இணைப்பு மற்றும் குடிநீர் வழங்குவதில் கால தாமதம் ஏற்படுகிறது.

7. பொதுமக்களுக்கு விநியோகத்திற்காக ஆற்று தண்ணீர் எடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதற்கு ஆகும் டீசல் செலவு கட்டுக்கடங்காமல் அதிகமாக வரன்முறையில்லாமல் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான கணக்கு ஏதும் நகராட்சியால் மேற்கொள்ளப்படவில்லை.

8. தரமற்ற ஒப்பந்ததாரர்களை வைத்து அனைத்துப்பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் பணிகளின் தரம், மற்றும் குறித்த காலத்திற்குள் முடிக்க முடியாமல் தாமதம் ஏற்படுகிறது.

மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கு பள்ளபட்டி நகராட்சியினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாததினால், சம்மந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவத்தினை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரான பள்ளபட்டி நகராட்சி ஆணையரின் 23.07.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.687/2025/சி1 – ல் உங்களுடன் முதல்வர் ஸ்டாலின் முகாமிற்கு தன்னை பொறுப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளதாலும் 24.07.2025–ம் தேதியன்று முகாம் நடைபெற உள்ளதாலும் தான் முகாம் நடைபெறும் இடங்களில் அவசியம் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் பள்ளபட்டி நகராட்சி பொறியாளர் திரு. ஐ. ரிச்சர்டு என்பவரை விசாரணைக்கு ஆஜராக அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டதை தொடர்ந்து பள்ளபட்டி நகராட்சி பொறியாளர். திரு. ஐ. ரிச்சர்டு என்பவர் 24.07.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்கு மூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

> "1) பள்ளபட்டியில் இயங்கிவரும் Crescent Matriculation School ஆக்கிரமிப்பில் கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்து மாவட்ட வருவாய் அலுவலரின் அறிக்கை கோரப்பட்டுள்ளது. மேற்படி தனியார் பள்ளிக்கு இதுவரை வரிவிதிப்பு செய்யப்படவில்லை. இப்பள்ளி 35 வருடங்களாக இயங்கி வருகிறது. இப்பள்ளிக்கு வரிவிதிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.
>
> 2) அரேபியன் டிலைட் ஹோட்டல் மற்றும் சைக்கிள் ஸ்டாண்ட்க்கு முறையாக வரி விதிப்பு செய்யப்படவில்லை. மேற்படி ஹோட்டல் கடந்த இரண்டு வருடங்களாக செயல்பட்டு வருகிறது. மேற்படி ஹோட்டலுக்கு வரிவசூல் செய்ய நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3) கடைவீதியில் உள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. நிரந்தர ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

4) பொதுமக்கள் குடிநீர் விநியோகத்திற்காக ஆற்று தண்ணீர் எடுப்பதற்கு தேவையான டீசல் செலவு தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு நகராட்சியால் முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

5) சாலைகள் அரசு விதிகளின்படி முறையாக போடப்படுகின்றது. இதில் எந்த தவறும் நடைபெறவில்லை.

6) பொதுமக்கள் குடிநீர் விநியோகம் மற்றும் Syntex tank பராமரிக்கும் பணி அரசு விதிகளுக்குட்பட்டு முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் ஏதும் விதிமீறல்கள் நடைபெறவில்லை.

7) அரசு விதிகளுக்குட்பட்டு நகராட்சியில் குடிநீர் குழாய்களை பராமரிக்கும் பணிக்கு ஒரு பிளம்பர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளது. எனினும் முறையாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சியில் நடைபெறும் பணிகளை அரசு விதிளுக்குட்பட்டு ஒபந்ததாரர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்கண்ட விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்." எனத்தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான பள்ளபட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை, பள்ளபட்டி நகராட்சி பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது புகார் மனு மற்றும் வாக்குமூலத்தில், பள்ளபட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் தனியார் கல்வி நிறுவனம், உணவு விடுதி போன்றவைகளுக்கு முறையாக பள்ளபட்டி நகராட்சியால் வரி விதிக்கப்படவில்லை எனவும், அதனால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும், திண்டுக்கல் ரோடு, உரூஸ் கடைத்தெரு மற்றும் கடைவீதியில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை எனவும், பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் சரியாக முறைப்படுத்தப்படவில்லை எனவும், பைப், மோட்டார் ஆகியவைகள் களவாடப்பட்டுள்ளது, அதற்கு நகராட்சியால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், சாலை அமைக்கும்போது சாலையை தோண்டி விட்டு சாலை போடுவதில்லை எனவும், பள்ளபட்டி நகராட்சியில் மொத்தம் 27 வார்டுகளுக்கும் ஒரே ஒரு பிளம்பர் வைத்து பராமரிப்பு பணிகள் செய்யப்படுவதினால், குடிநீர் இணைப்பு மற்றும் குடிநீர் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது எனவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவித்து அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

15$^{th}$. CFC grant பெற ஏதுவாக தமிழ்நாடு முழுவதும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் 15% வரி உயர்வு செய்ய தலைமை அலுவலகம் மூலம் ஆணைகள் பெறப்பட்டு அதன்படி குறைந்த மதிப்பீடு உடைய, இதுவரை மதிப்பீடு செய்யப்படாத மற்றும் புதியதாக கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு உரிய முறையில் அளவீடு செய்து வரி விதிப்பு செய்யப்பட்டு 15% வரி உயர்வு செய்யப்பட்டது என்பதும் இதனால் பள்ளபட்டி நகராட்சிக்கு வரி இழப்பு ஏதும்

ஏற்படவில்லை என்பதையும், வரிகுறைப்பு ஏதும் செய்யப்படவில்லை என்பதும் நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

பள்ளபட்டியில் இயங்கி வரும் Crescent Matriculation தனியார் பள்ளி ஆக்கிரமிப்பில் கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்து மாவட்ட வருவாய் அலுவலரின் அறிக்கை கோரப்பட்டுள்ளதும், மேற்படி பள்ளிக்கு இதுவரை வரி விதிப்பு செய்யப்படவில்லை என்பதும், அரேபியன் டிலைட் ஹோட்டல் மற்றும் சைக்கிள் ஸ்டாண்டுக்கு முறையாக வரிவிதிப்பு செய்யப்படவில்லை என்பதும், கடைவீதியில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு நிரந்தர ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருவதும், பொதுமக்கள் குடிநீர் விநியோகத்திற்காக ஆற்று தண்ணீர் எடுப்பதற்கு தேவையான டீசல் செலவு தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு நகராட்சியால் முறையாக பராமரிக்கப்பட்டு வருவதும், சாலைகள் அரசு விதிகளின்படி முறையாக போடப்படுகின்றன என்பதும், பொதுமக்கள் குடிநீர் விநியோகம் மற்றும் Syntex tank பராமரிக்கும் பணி அரசு விதிகளுக்கு உட்பட்டு முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், அரசு விதிகளுக்குட்பட்டு நகராட்சியில் குடிநீர் குழாய்களை பராமரிக்கும் பணிக்கு ஒரு பிளம்பர் மட்டும் நியமிக்கப்பட்டுள்ளதும், முறையாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதும் நகராட்சி பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்றம் கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிடலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

1) பள்ளபட்டி நகராட்சி ஆணையரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு பள்ளபட்டி Crescent Matriculation பள்ளி, அரேபியன் டிலைட் ஹோட்டல் மற்றும் சைக்கிள் ஸ்டாண்டுக்கு உரிய வரிவிதிப்பினை முறையாக அரசுக்கு நிதியிழப்பு ஏற்படாதவண்ணம் தமிழ்நாடு அரசு விதிகளுக்குட்பட்டு வரிவிதிப்பு நிர்ணயம் செய்யவும், மேலும் பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் விநியோகம் மற்றும் Syntex Tank பராமரிக்கும் பணி, சாலைகள் அமைக்கும் பணி போன்ற பணிகளை முறையாக அரசு விதிகளுக்குட்பட்டு மேற்கொள்ளவும் பள்ளபட்டி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2) 35 ஆண்டுகளாக இயங்கிவரும் Crescent Matriculation School-க்கு வரிவிதிப்பு தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அரேபியன் டிலைட் ஹோட்டல் மற்றும் சைக்கிள் ஸ்டாண்டுக்கு வரிவிதிப்பு செய்யப்படவில்லை என பள்ளபட்டி நகராட்சி பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருவதால், மேற்படி இனங்களில் இதுவரை நடவடிக்கை எடுக்காமல் காலம்தாழ்த்திய அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்து ஆணையிடப்படுகிறது.

3) திண்டுக்கல் ரோடு, உரூஸ் கடைத்தெரு மற்றும் கடைவீதியில் இயங்கி வரும் ஆக்கிரமிப்புகள் நெடுஞ்சாலைத்துறை மூலம் அகற்றப்பட்டுவிட்ட நிலையில், ஆக்கிரமிப்பு தொடர்பான புகார்கள் வரப்பெறும்பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பள்ளபட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, ஆக்கிரமிப்புகளை அவ்வப்போது தொடர்ந்து கண்காணித்து அரசு விதிகளின்படியும், மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் ஆணைகளின்படி ஆக்கிரமிப்புகளை அகற்றிட துரித நடவடிக்கையை

மேற்கொள்ளுமாறு பள்ளபட்டி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

4) பல இனங்களில் சட்ட விரோதமாக வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் மனுதாரரை விசாரணை செய்து தொடர் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறார்.

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 14–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. சு. சேக்பரீத்,
எண்.128, பட்டாணித் தெரு,
11–வது வார்டு மாமன்ற உறுப்பினர்,
பள்ளபட்டி,
கரூர் மாவட்டம்,

2) நகராட்சி ஆணையர்,
பள்ளபட்டி நகராட்சி,
கரூர் மாவட்டம்,

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்